**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**CC.No. 41/2024**

**Deposition of PW–1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | ராமசாமி கண்ணன் | **Age** | : | 72/2026 |
| **Father Name** | : | ராமசாமி | **Religion** | : | இந்து |
| **Village** | : | போடிநாயக்கனூர் | **Calling** | : | விவசாயம் |
| **Taluk** | : | போடிநாயக்கனூர் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **16/04/2026.**

1 ,2 எதிரிகள் ஆஜரில்லை. ஆஜராவதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1) நான் போடிநாயக்கனூரில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 08.05.2022 ஆம் தேதி என்னிடம் கைமாற்று கடனாக அர்னால்டு என்ற அருண் என்பவர் வாங்கினார். அன்றைய தினம் அர்னால்டும், ராஜாராமும் வந்திருந்தனர். சில மாதங்களில் திருப்பித் தருவதாக கூறிவிட்டு வாங்கி சென்றனர் . மீண்டும் நான் அதைக் கேட்டேன், அப்போது 08.01.2023 ஆம் தேதி அவர்கள் ஒரு காசோலையை கொடுத்தார்கள். காசோலையில் அருண் என்ற அர்னால்டு என் முன்னிலையில் தான் கையொப்பம் செய்து கொடுத்தார்.

2) அந்த காசோலையின் எண் 546586 ஆகும் அதில் 13.01.2023 என தேதியிட்டு கொடுத்தார் அதனை நான் 13 ஆம் தேதி அன்று எனது கனரா வங்கி கணக்கில் அதனை வசூலுக்கு தாக்கல் செய்தேன். அந்த காசோலை கையெழுத்து மாறுபாடாக இருப்பதாக சொல்லி திருப்பப்பட்டு விட்டது.

உண்மையில் அர்னால்டு கையெழுத்து செய்த அந்த காசோலை வேறு ஒரு நபருடையது என்ற விவரம் அதன் பிறகு எனக்கு தெரியவந்தது.

3) ஒரு வங்கியில் பணிபுரியும் அதிகாரி என்னை இவ்வாறு ஏமாற்றுவார் என்று நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. காசோலை திரும்பியது சம்பந்தமாக நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். மேலும் முதல் தகவல் அறிக்கையும், அவர் மீது பதிவு செய்யப்பட்டது. மேலும் அதற்கு அவர் அனுப்பிய பதில் அறிவிப்பில் அந்த காசோலை அவருடையது இல்லை என்றும் தான் பணம் எதுவும் என்னிடம் வாங்கவில்லை என்றும் கூறி பதில் அறிவிப்பு அனுப்பினார். அவர் அனுப்பிய பதில் அறிவிப்பில் கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் பொய்.

4) நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை,மேற்படி அர்னால்டு பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை அட்டையில் உள்ள கையொப்பமும், காசோலையில் உள்ள கையொப்பம் ஒன்றாக உள்ளது என்பதை நீதிமன்றம் பார்வையிட்டாலே தெரிய வரும். எனவே எதிரி மீது தகுந்த நடவடிக்கை எடுத்து எனக்கு நீதி வழங்கும் படி கேட்டுக் கொள்கிறேன்.

| | |
|---|---|
| 1 | 13.01.2023 ம் தேதியிட்ட இந்தியன் வங்கி வத்தலக்குண்டு கிளை ரூ.5,00,000/-க்கான காசோலை எண்.546586- அசல். ம.சா.ஆ.1 ஆகவும் |
| 2 | 16.01.2023 ம் தேதியில் Canara பேங்க், போடிநாயக்கனூர் கிளையில் காசோலை Drawers Signature differs என திருப்பப்பட்டதற்கான குறிப்பாணை அசல் ம.சா.ஆ.2 ஆகவும் |
| 3 | 25.01.2023 ம் தேதியிட்ட வழக்கறிஞர் சட்டஅறிவிப்பு அலுவலக நகல் ம.சா.ஆ.3 ஆகவும் |
| 4 | 27.01.2023ம் தேதியில் 1-ம் எதிரி சட்ட அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் மற்றும் 25.01.2023 ம் தேதியிட்ட அஞ்சல் ரசீது எண்ணிக்கை -2 அசல் முறையே ம.சா.ஆ.4 மற்றும் ம.சா.ஆ.5 ஆகவும் |
| 5 | 30.01.2023 ம் தேதி 2-ம் எதிரி சட்ட அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பிய அஞ்சல் உறை அசல் - ம.சா.ஆ-6 ஆகவும் |

| | |
|---|---|
| 6 | 03.02.2023 ம் தேதியிட்ட எதிரி தரப்பில் அனுப்பப்பட்ட வழக்கறிஞர் பதில் அறிவிப்பு அசல் ம.சா.ஆ–7 ஆகவும் |

குறியீடு செய்ய வேண்டுகிறேன்.
**(மேற்படி ஆவணங்கள் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்குவிசாரணை இல்லை எனத் தெரிவித்ததால் குறுக்குவிசாரணை இல்லை என முடிக்கப்பட்டது.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M
Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.04.16 16:19:44 +0530

**Judicial Magistrate,**
**Bodinayakanur.**